**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.30/2024**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| **Deposition of Witness for** | | **PW 1** | | |
| பெயர் | பரமேஸ்வரி | தொழில் | : | கூலி |
| கணவர் பெயர் | : சேகர் | வயது | : | 55 |
| கிராமம் | : தேவிகாபுரம் | | : | |
| தாலுக்கா | : சேத்பட் | | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.02.2026. நேரம் - 11.50**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் மேற்படி கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

**ஆவணங்கள்**

1. 21.08.2003 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்,
2. 17.11.2008 அன்று மல்லிகா, காமாட்சி, பூங்கொடி ஆகியோர் சேர்ந்து எனக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்,
3. வீட்டு வரி ரசீதுகள் அசல் (எண்ணிக்கை 4) **வா.சா.ஆ.3** ஆகவும்,
4. 26.07.2023 தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் (எண்ணிக்கை 1) **வா.சா.ஆ.4** ஆகவும்,
5. 09.03.2015 அன்று அண்ணாதுரை என்பவர் 1ம் பிரதிவாதி புவனேஸ்வரிக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகவும்,
6. 11.03.2024 அன்று என் கணவர் சேத்பட் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கான சிஎஸ்ஆர் எண்.143/2024 அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை முடிந்து பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் - 12.00**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni